www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu

Ranipettai District

# இரண்டாம் திருப்புதல் பொதுத்தேர்வு - 2023

## பத்தாம் வகுப்பு

பதிவு எண் :

## தமிழ்

நேரம் : 3.00 மணி | பகுதி - I | மதிப்பெண்கள் : 100

15 x 1 = 15

**அனைத்து வினாக்களுக்கும் விடையளி.**

**பலவுள் தெரிக:**

1. வாய்மையே மழைநீராகி - இத்தொடரில் வெளிப்படும் அணி
   அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம் இ) உருவகம் ஈ) தீவகம்
2. சரியான அகரவரிசையைத் தேர்ந்தெடுக்க
   அ) உழவு, மண் , ஏர், மாடு ஆ) மண், மாடு, ஏர், உழவு
   இ) உழவு, ஏர், மண், மாடு ஈ) ஏர், உழவு, மாடு, மண்
3. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?
   அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால் ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்
   இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால் ஈ) அங்கு வறுமை இல்லாததால்
4. 'மொழிஞாயிறு' என்றழைக்கப்படுபவர் ________
   அ) தேவநேயப்பாவாணர் ஆ) கம்பர்
   இ) வீரமாமுனிவர் ஈ) பெருஞ்சித்திரனார்
5. 'பெரிய மீசை' சிரித்தார் - வண்ணச் சொல்லுக்கான தொகையின் வகை எது?
   அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை
   இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை
6. 'சிலம்பு அடைத்திருந்த பாக்கம் எய்தி' என்னும் அடியில் பாக்கம் என்பது
   அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்
7. கூத்தராற்றுப்படை என்று அழைக்கப்படும் நூல் ________
   அ) மலைபடுகடாம் ஆ) முல்லைப்பாட்டு இ) பரிபாடல் ஈ) புறநானூறு
8. ஏறுகோட்பறை ________ என்னும் நிலத்துக்குரிய பறை ஆகும்
   அ) குறிஞ்சி ஆ) மருதம் இ) முல்லை ஈ) நெய்தல்
9. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி கருதியது ________
   அ) திருக்குறள் ஆ) புறநானூறு
   இ) சிலப்பதிகாரம் ஈ) கம்பராமாயணம்
10. பால காண்டம் ஆற்றுப்படலத்தில் பாயும் நதியாகச் சுட்டப்படுவது ________
    அ) வேளியாறு ஆ) பாலாறு இ) சரயுநதி ஈ) கோதாவரி
11. காலக்கணிதம் கவிதையில் இடம் பெற்ற தொடர் ________
    அ) இகழ்ந்தால் என் மனம் இறந்து விடாது ஆ) என் மனம் இகழ்ந்தால் இறந்து விடாது
    இ) இகழ்ந்தால் இறந்து விடாது என் மனம் ஈ) என் மனம் இறந்து விடாது இகழ்ந்தால்

பாடலைப் படித்து வினாவிற்கு விடையளி:

**பகர்வனர் திரிதரு நகர வீதியும்**
**பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்**
**கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்**
**தூசும் துகிரும் ஆரமும் அகிலும்**

12. இவ்வடிகள் இடம் பெற்றுள்ள நூல் எது?
    அ) மெய்க்கீர்த்தி ஆ) சிலப்பதிகாரம் இ) மலைபடுகடாம் ஈ) பரிபாடல்
13. பாடலில் அமைந்த மோனையை எடுத்து எழுதுக?
    அ) பகர்வனர் , பட்டினும் ஆ) மயிரினும் , திரிதரு
    இ) தூசும் இருக்கையும் ஈ) வீதியும் , அகிலும்

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



14. காருகர் பொருள் தருக.
அ) மரத்தச்சர் ஆ) இரும்புக்கொல்லர் இ) உப்புவிற்பவர் ஈ) நெசவாளர்

15. இப்பாடலின் ஆசிரியர் யார்?
அ) நக்கீரனார் ஆ) நப்பூதனார்
இ) சீத்தலைச் சாத்தனார் ஈ) இளங்கோவடிகள்

## பகுதி - II

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க** 4 x 2 = 8

**(21- வது வினா கட்டாய வினா)**

16. விடைகளுக்கேற்ற வினா அமைக்க.
அ) உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு மலேசியா
ஆ) தமிழ்த் தென்றல் என்று அழைக்கப்படுபவர் திரு.வி.க

17. **'வேங்கை'** என்பதைத் தொடர்மொழியாகவும், பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.

18. செய்குத்தம்பி பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடராக்குக.

19. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும், நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.

20. வறுமையிலும் படிப்பின் மீத நாட்டம் கொண்டவர் ம.பொ.சி என்பதற்குச் சான்று தருக.

21. **'குன்றேறி'** எனத் தொடங்கும் குறளை எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி.** 5 x 2 = 10

22. முல்லைத் திணைக்குரிய கருப்பொருள்கள் நான்கினை எழுதுக.

23. தீவக அணியின் வகைகள் யாவை?

24. கலைச்சொற்கள் தருக:
**அ) Revivalism ஆ) Consonant**

25. இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
**வளி - வாளி விடு - வீடு**

26. ஊர்ப் பெயர்களில் மரூஉவை எழுது.
**1. புதுச்சேரி 2. தஞ்சாவூர்**

27. **மாஅல்** - பொருளும் இலக்கணக் குறிப்பும் தருக.

28. **உரைத்த** - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

## பகுதி - III

### பிரிவு - 1

**எவையேனும் இரண்டனுக்கு விடையளி:** 2 x 3 = 6

29. தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை எழுதுக.

30. கரகாட்டம் குறித்து எழுதுக.

31. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

தமிழர், போரிலும் அறநெறியைப் பின்பற்றினர். போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார் முதியோர், ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது. போரின் கொடுமையிலிருந்து பசு, பார்ப்பனர், பெண்கள் நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று ஒரு பாடல் கூறுகிறது. தம்மைவிட வலிமை குறைந்தாரோடு போர் செய்வது கூடாது என்பதை ஆவூர் மூலங்கிழார் குறிப்பிட்டிருக்கிறார்.

அ) போர் அறம் என்பது எதனைக் குறிக்கிறது?
ஆ) யாரோடு போர் செய்வது கூடாது என்று, ஆவூர் மூலங்கிழார் குறிப்பிடுகிறார்?
இ) எவ்வாறு போர் புரிய வேண்டும்?

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

### பிரிவு - 2

எவையேனும் இரண்டனுக்கு விடையளி. 2 x 3 = 6

வினா எண்: 34 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

32. 'சித்தாளின் மனச்சுமைகள் செங்கற்கள் அறியாது' - இடஞ்சுட்டிப் பொருள் தருக?
33. முதல் மழை விழுந்ததும் என்னவெல்லாம் நிகழ்வதாக கு.பா.கவி பாடுகிறார்?
34. அடிபிறழாமல் எழுதுக.

அ) 'அருளை பெருக்கி' .......... எனத் தொடங்கும் நீதி வெண்பா பாடலை எழுதுக.

*(அல்லது)*

ஆ) 'நவமணி வடக் கயில்' ........ எனத் தொடங்கும் தேம்பாவணிப் பாடலைப் எழுதுக.

### பிரிவு - 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி. 2 x 3 = 6

35. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.
36. "கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க் கடுக்கிய
கோடி உண் டாயினும் இல்"
- இக்குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாடு தருக.
37. நிரல்நிறை அணியை சான்றுடன் விளக்குக.

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 5 x 5 = 25

38. கருணையன் தாய் மறைவுக்கு வீரமாமுனிவர் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க

*(அல்லது)*


இறைவன் , புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

39. உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன அதனால் இரவில் காலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவண செய்யும்படி மின்வாரிய அலுவலருக்கு கடிதம் எழுதுக.

*(அல்லது)*

பள்ளி ஆண்டுவிழா மலருக்காக நீங்கள் நூலகத்தில் படித்த கட்டுரை / கதை / கவிதை நுலுக்கான மதிப்புரை எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



41. வேலூர் மாவட்டம் நம்பர்.7 பாரதி தெரு, ஒலக்கூரில் வசிக்கும் தமிழ்செல்வன். த/பெ ரவி என்பவர் நூலக உறுப்பினராக சேர படிவம் நிரப்புக.

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com

www.Padasalai.Net - No.1 Educational Website in Tamilnadu



42. புயலின் போது நீங்கள் மேற்கொள்ள வேண்டிய செயல்கள் ஐந்தை வரிசைப்படுத்துக.

*(அல்லது)*

மொழிபெயர்க்க:

The Golden Sun gets up early in the morning and starts its bright rays to fade away the dark. The Milky clouds start their wandering. The Colourful birds start twitting their morning melodies in Percussion The cute butterflies dance around the flowers, The flowers fragrance fills the breeze. The breeze gently blows everywhere and makes everything Pleasant.

## பகுதி - V

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்கவும்.** 3 x 8 = 24

43. அ) ஒரு குழந்தையைத் தூக்கவும் கீழேவிழுந்த ஒரு தேனீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறை கொள்ளுமா? வெறும் வணிகத்துடன் நின்று விடுமா? இக்கருத்துக்களை ஒட்டிச் செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள் பற்றி விவரித்து எழுதுக.

*(அல்லது)*

ஆ) மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும் பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப் பேச்சு ஒன்றை உருவாக்குக.

44. அ) **'கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே'** என்கிறது வெற்றி வேற்கை மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம் அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச்சுடரை ஏற்றிய கதையைப் பற்றி உங்களின் கருத்துகளை விவரிக்க.

*(அல்லது)*

ஆ) அழகிரிசாமியின் **"ஒருவன் இருக்கிறான்"** சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து எழுதுக.

45. அ) நாட்டு விழாக்கள் - விடுதலைப் போராட்ட வரலாறு - நாட்டு முன்னேற்றத்தில் மாணவர் பங்கு குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் கட்டுரை வரைக.

*(அல்லது)*

ஆ) உன் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற மரம் நடுவிழாவிற்கு வந்த சிறப்பு விருந்தினருக்கு பள்ளியின் "பசுமைப்படை சார்பாக நன்றியுரை" எழுதுக.

******

Kindly send me your questions and answerkeys to us : Padasalai.Net@gmail.com